**செய்தியாளர்கள் சந்திப்பு – 26–8–2006**

செய்தியாளர் :– இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் முக்கியமாக என்ன முடிவு எடுக்கப்பட்டது ?

முதல் அமைச்சர் கலைஞர் :– வழக்கமாக நடைபெறும் அமைச்சரவை கூட்டம் தான். இந்த மூன்று மாதங்களில் இது எட்டாவது அமைச்சரவைக் கூட்டம்.

செய்தியாளர் :– டெல்லியில் இட ஒதுக்கீட்டிற்கான மசோதா அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதில் 3 ஆண்டுகளில் அமுல்படுத்துவதைப் போல கூறப்பட்டுள்ளதே ? நீங்கள் ஒரேயடியாக உடனடியாக இப்போதே செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்கள். ஆனால் மத்திய அரசில் இருப்பவர்கள் படிப்படியாகத் தான் செய்யப் போவதாகக் கூறுகிறார்கள். அதனால் உங்களுக்குத் திருப்தி தானா ?

முதல் அமைச்சர் கலைஞர் :– மத்திய அரசு இதைச் செய்யவே முடியாது என்று சொல்லிவிடவில்லை. அதுவரை எங்களுக்குத் திருப்தி கரம் தான்.

செய்தியாளர் :– பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் நெய்வேலி பிரச்சினையில் தாங்கள் உறுதியாக இருந்து மத்திய அரசை வாபஸ் செய்ய வைத்ததைப் போல் இந்தப் பிரச்சினையிலே தாங்கள் தீவிர மாக இல்லை என்பதற்கான காரணம் புரியவில்லை என்று கூறியிருக்கிறாரே ?

முதல் அமைச்சர் கலைஞர் :– நான் அவரிடம் நேரில் பேசுகின்ற வாய்ப்பு ஏற்படும்போது இதைப்பற்றி விவரமாகப் பேசுவேன். நெய்வேலி பிரச்சினை யில் ஒரே முகமாக எல்லோரும் எதிர்ப்புக் குரல் எழுப்பினோம். இட ஒதுக் கீட்டில் எதிர்க்குரல்களும் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க

வேண்டி யிருக்கின்றது. இட ஒதுக்கீடு என்பதை இன்று நேற்று முளைத்த தற்காலச் சரித்திரம் அல்ல. ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுக்குரியது. பெரியார், அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரெல்லாம் எழுப்பிய குரலின் எதிரொலியாகத் தான் 1950ஆம் ஆண்டு வாக்கில் இந்தியப் பிரதமராக இருந்த பண்டித நேரு அவர்கள் இந்த இட ஒதுக்கீட்டு உரிமைக்கான முதல் திருத்தத்தையே அரசியல் சட்டத்தில் கொண்டு வந்தார் என்பதை எண்ணிப் பார்க்கும் போதும், சுமார் இருபதாண்டுகளுக்கு முன்பு வி.பி. சிங் பிரதமராக இருந்த போது மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றிய போது ஒரேயடியாக முழுமையாக நிறைவேற்ற முடியாமல் பகுதிப்பகுதியாகத் தான் நிறைவேற்ற முற்பட்டார் என்பதும் இட ஒதுக்கீட்டு வரலாற்றில் இடையிடையே தோன்றிய எழுச்சி மிகு அத்தியாயங்கள் ஆகும். ஆரம்பமாகி விட்ட, அதற்குப் பிறகும் தொடர்ந்து நடைபெறுகின்ற இந்த எழுச்சி – நானும் டாக்டர் ராமதாஸ் போன்றவர்களும் எண்ணுவது போல முழுமையான வெற்றியைப் பெற்றே தீருவோம்.

செய்தியாளர் :– மத்திய அரசு இந்த மசோதாவை அறிமுகம் செய்வதற்கு முன்பு உங்களைக் கலந்து கொண்டார்களா ?

முதல் அமைச்சர் கலைஞர் :– தமிழ்நாட்டில் உள்ள மத்திய அமைச்சர் கள் எல்லோரும் கலந்து கொண்டு தான் இந்த மசோதாவைப் பற்றிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது மேலும் முன்னேறுவதற்கு என்னென்ன முயற்சிகள் உண்டோ அவைகளையெல்லாம் எடுப்போம். வண்டி ஒன்று நின்று விட்டாலோ அல்லது மெதுவாகப் போனாலோ அதைத் தள்ளுவதில்லையா, அதைப் போன்ற முயற்சிகளில் ஈடுபடுவோம்.

செய்தியாளர் :– இட ஒதுக்கீடு மசோதா அறிமுகம் செய்தது குறித்து உங்களுக்கு திருப்தி என்று சொல்லலாமா ?

முதல் அமைச்சர் கலைஞர் :– கிடைத்ததற்கு திருப்தி அடைவோம், கிடைக்காததற்காக போராடுவோம்.

செய்தியாளர் :– சட்டமன்றத்தில் நீங்கள் விளக்கம் அளித்த பிறகும், சட்டக் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக் கிறார்களே ?

முதல் அமைச்சர் கலைஞர் :– அது அரசுக் கல்லூரி அல்ல. அதை நேற்றே தெளிவாகச் சொல்லிவிட்டேனே! அது தனியார் கல்லூரி. சென்ற ஆண்டு வரையிலே அந்தக் கட்டணத்தைத் தான் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கட்டணத்தை ஒத்துக் கொண்டு தான் அதிலே சேர்ந்திருக்கிறார்கள். நேற்று சட்டப் பேரவையில் இதைப்பற்றி விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். நேற்று நான் சட்டசபையில் சொன்னவாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைகளையேற்று, மாணவர்களையும் விடுதலை செய்திருக்கிறோம்.

செய்தியாளர் :– இது போன்ற போராட்டங்களை பின்னால் இருந்து தூண்டு கிறவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் ?

முதல் அமைச்சர் கலைஞர் :– அதை முன் கூட்டி சொல்ல முடியாது.

செய்தியாளர் :– அந்த மாணவர்கள் விரும்பினால் அவர்களை வேறு அரசு கல்லூரிகளில் சேர்க்க இயலுமா ?

முதல் அமைச்சர் கலைஞர் :– அவர்கள் இன்னும் எங்கள் அமைச்சரிடமே பேசவில்லையே, முன்னாள் அமைச்சரிடத்தில் அல்லவா பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

செய்தியாளர் :– சென்னை நகரத்தின் நெரிசலைக் குறைப்பதற்காக புற நகரங்களை உருவாக்குவோம் என்று சொன்னீர்கள். அதற்கு டாக்டர் ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறாரே ?

முதல் அமைச்சர் கலைஞர் :— கிராம மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் செய்யச் சொல்கிறார், அவ்வளவு தானே ? யாருக்கும் பாதிப்பு ஏற்படாமல் தான் செய்வோம். நெல் விளையும் இடத்தையோ, விளைச்சல் நிலங்களையோ கட்டிடம் கட்டுவதற்குப் பயன்படுத்த மாட்டோம்.

செய்தியாளர் :— அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதற்கான சட்டம் வேறு ரூபத்தில் வருமா ?

முதல் அமைச்சர் கலைஞர் :— நீங்கள் புரிந்து கொள்ளாமல் செய்தி வெளியிட்டால் என்ன செய்ய முடியும். எட்டாவது பிரிவைப் பற்றி உச்ச நீதி மன்றத்தில் கூறப்பட்டது. அதற்கு தடை கொடுத்தார்கள். எனவே அதை நாங்கள் எடுத்து விட்டோம், அவ்வளவு தான். எந்தச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற பிரிவெல்லாம் அப்படியே இருக்கிறது. அதிலே என்ன இருக்கிறது என்றால், Customs and Usages என்பதற்கு விரோதமாக செய்வதாக கூறப்பட்டது. அதைச் சொல்லி அதற்கு தடை கொடுத்தார்கள். நாம் பொதுவாக பழக்க வழக்கத் திற்கு விரோதமாக நடத்துவதில்லை அல்லவா ? பொதுவாக திருமணம் என்றால், சுயமரியாதை திருமணம் என்றால் கூட, ஆணுக்கும் பெண்ணுக்கும் தான் நடத்துகிறோமே தவிர, வழக்கத்திற்கு விரோதமாக நடத்துவதில்லை.

செய்தியாளர் :— உள்ளாட்சி தேர்தல் குறித்து உங்கள் கூட்டணியிலே உள்ள கட்சிகளே கூட ஒத்தக் கருத்தாக கூறாமல் இருக்கிறார்களே ?

முதல் அமைச்சர் கலைஞர் :— எல்லா கட்சிகளையும் கலந்து கொண்டு தான் முடிவெடுக்கிறோம். சில பேர் நாங்கள் எந்தக் கட்சிகளையும் கலந்து கொள்ளவில்லை யென்று செய்தி போடுகிறார்கள். நான் தி.மு. கழகத்தின் கூட்டணி கட்சிகளை யெல்லாம் கலந்து கொண்டு தான் இந்த அவசரச் சட்டமே கொண்டு வரப்பட்டது. ஏனென்றால் நேர் முகத் தேர்தலை இரண்டு முறை நடத்திப் பார்த்து விட்டோம். நாங்கள் நேர் முகத் தேர்தலை

ஆதரித்தவர்கள் தான். வேண்டுமென்று சொன்னவர்கள் தான். ஆனால் நேர்முகத் தேர்தலுக்குப் பிறகு வந்த மாநகராட்சிகள், நகராட்சிகள் ஆகிய வற்றில் தீர்மானங்களைக் கூட நிறைவேற்ற முடியாமல், எவ்வளவு கலாட்டா வில் நடந்து முடிந்தன என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஏனென்றால் அதைப் பற்றி பக்கம் பக்கமாக செய்திகளை வெளியிட்ட பத்திரிகைகள் நீங்கள்.

செய்தியாளர் :— கூட்டணி கட்சிகளுக்குள் இடங்களைப் பிரித்து கொள்வதில் குழப்பம் வரும் என்று சொல்லப்படுகிறதே ?

முதல் அமைச்சர் கலைஞர் :— கூட்டணி இடங்களைப் பிரித்துக் கொள்வதைப் பாதிக்கின்றது என்றால் எங்களுடைய பிரதான கூட்டணிக் கட்சிகள் எல்லாம் இதை ஏற்றுக் கொண்டிருந்திருக்க மாட்டார்கள். தற்போது அவர்கள் ஏற்றுக் கொண்டு தான் அவசரச் சட்டமே கொண்டு வந்தோம்.

இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் வார்டுகள் ஒதுக்கல் பற்றி யெல்லாம் பேசினோம். குறிப்பாக மதுரை மாவட்டம் பாப்பாப்பட்டி, கீரிப் பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டம் கொட்டக்கச்சியேந்தல் ஆகிய நான்கு கிராம ஊராட்சிகளில் ஏற்கனவே ஆதி திராவிடர் களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர் பதவி இடங்கள் முறையாக நடைமுறைக்கு வர முடியாத அசாதாரண சூழ்நிலை உருவானதைக் கருத்தில் கொண்டு இந்த நான்கு கிராம ஊராட்சித் தலைவர் பதவிகளுக்கு சுழற்றி முறையில் ஒதுக்கீடு செய்யாமல், விதி விலக்கு அளித்து அந்தக் கிராமங்களில் தலைவர் பதவி இடங்களுக்கு இப்போது கடைப்பிடிக்கப்பட்ட அதே முறையைத் தொடருவது என்று முடி வெடுக்கப்பட்து.

செய்தியாளர் :— மத்திய அரசிடம் இதற்கு ஒப்புதல் பெற வேண்டுமா ?

முதல் அமைச்சர் கலைஞர் :– தேவையில்லை, மாநில அரசே முடிவெடுத்துக் கொள்ளலாம். மத்திய அரசின் சட்டமாக இது இருந்தாலுங் கூட மாநில அரசே இதிலே முடிவெடுக்கலாம். அவர்களுடைய உரிமைகள் நிலைநாட்டப்படுகின்ற வரையில், அவர்களும் தலைவர்களாக ஆகலாம், இப்போது தலைவராக ஆக முடியாத ஒரு நிலைமை இருக்கிறது அல்லவா? அவர்கள் துணிவாகவும், தைரியமாகவும்போட்டியிடுவதற்கும் அவர்களுக்கு துணை நிற்க வேண்டும், அங்கே எழுகின்ற இந்தப் பிரச்சினைகளை வைத்து அங்கே எந்த மாற்றமும் செய்யக் கூடாதென்று இப்போது சட்டப் பேரவையிலே கூட எல்லா கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்திப் பேசியுள்ளார்கள். எனவே இது எந்தவொரு கட்சிக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சினையாக இல்லாமல் எல்லா கட்சிகளும் முன் நின்று வெற்றி கரமாக நிறைவேற்ற வேண்டிய சமுதாய உரிமைப் பிரச்சினை என்பதை மனதிலே கொண்டு செயல்படுவார்கள் என்பதையும் அதற்கு மக்களின் மகத்தான ஒத்துழைப்பும் கிடைக்கும் என்பதையும் எதிர்பார்த்தே இந்த முடிவினை எடுத்திருக்கிறோம்.

செய்தியாளர் :– கலர் டி.வி. வழங்குவது எப்போது தொடங்கும்?

முதல் அமைச்சர் கலைஞர் :– செப்டம்பர் 15ஆம் தேதி காஞ்சிபுரம் மாவட்டத்தில் படப்பையில் உள்ள சமத்துவபுரத்தில் உள்ள வீடுகளுக்கு காலையிலே வண்ணத் தொலைக் காட்சி பெட்டிகள் வழங்கும் விழாவிலே நான் கலந்து கொண்டு வழங்குகிறேன். அன்று மாலையில் காஞ்சிபுரத்தில் நடைபெறும் முப்பெரும் விழாவில் கலந்து கொள்கிறேன். மற்ற மாவட்டங்களில் அமைச்சர்களும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் 16ஆம் தேதியன்று நடை பெறும் விழாக்களில் கலந்து கொண்டு அவர்கள் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்கு வார்கள்.

செப்டம்பர் 17ந்தேதி பெரியார் பிறந்த நாள் விழாவில் திருவள்ளூரில் தரிசு நிலம் வழங்குகின்ற நிகழ்ச்சியிலே நான் கலந்து கொண்டு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தரிசு நிலங்களை வழங்குகின்ற ஆரம்ப விழாவினை நடத்தி வைக்கிறேன். அதே நாளில் 17ஆம் தேதி மாலையில் பல இடங்களில் அமைச்சர்களும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர் களும் கலந்து கொண்டு தரிசு நிலங்களை வழங்குகிறார்கள்.

செய்தியாளர் :– நீங்கள் வெளி நாடு போகப் போவதாக செய்திகள் வருகிறதே ?

முதல் அமைச்சர் கலைஞர் :– சந்திர மண்டலம் போகிறேன். (சிரிப்பு)

செய்தியாளர் :– வண்ணத் தொலைக்காட்சி பெட்டி பெறுவோர், தரிசு நிலம் பெறுவோர் பட்டியல் தயாராகி விட்டதா ?

முதல் அமைச்சர் கலைஞர் :– தயாராகிக் கொண்டிருக்கின்றது. ஒரே நாளில் அத்தனையையும் தயார் செய்ய முடியாதல்லவா ? பூதகி; தேவகி; யசோதா பால் கொடுப்பது போலவா கொடுக்க முடியும் ? யசோதா என்றால் புராண காலத்து யசோதாவைச் சொல்கிறேன். பூதகி மாதிரி ஒரேயடியாகத் திணிக்க முடியுமா, பால் கொடுப்பவர்களுக்குத் தான் அது தெரியும். ஒரே நாளில் தமிழ்நாட்டில் உள்ள அத்தனை பேருக்கும் டி.வி. கொடுத்து விட முடியுமா ? நிலத்தை எடுத்துக் கொடுத்து விட முடியுமா ?

செய்தியாளர் :– ஆட்சியின் 100 நாட்கள் முடிவுற்ற நிலையில் எத்தனை அமைச்சர்கள் "பாஸ் மார்க்" பெற்றிருக்கிறார்கள் ?

முதல் அமைச்சர் கலைஞர் :– எனக்குத் தான் "பாஸ்" மார்க். நான் தான் தேர்வு பெற்றிருக்கிறேன். இந்த அமைச்சர்களை யெல்லாம் தேர்வு செய்ததால் 100 மதிப்பெண் பெற முடிந்துள்ளது. எனவே தான் எனக்குத் தான் "பாஸ்" . நான் தான் "பாஸ்" (முதலமைச்சர்) ஆகவே நான் "பாஸ்" (தேர்வாகியுள்ளேன்)